# தொழுகையாவது எது?

TOLUKAI YAVATU ETU

✱

ஆசிரியர் :

ஹஜரதுல் அல்லாமா, முஜாஹிதே ஆஜம்
ஸையித் அபுல்ஆலா மௌதூதி.

✱

தமிழாக்கியோர் :

உத்தமபாளையம்

ஜனாப். மௌலவி.
P. S. K. முஹம்மத் இப்ருஹீம் சாஹெப் பாகவி.

✱

ASAR TAKYA. TANJORE.
S. INDIA.

**Prize As. 2**

HIJIRI 1373. A. C. 1954.

# "NAMAZ" (KUTBA)

( TRANSLATED IN TAMIL LANGUAGE. )

AUTHOR:

ALLAMA SYED ABUL ALA MOUDUDI

Copies 2000. Serial No. 5

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய
அல்லாஹ்வின் திரு நாமத்தால்

தொழுகையானது மிகப்பெரிய வணக்கமாகும். திருகுர்ஆனிலே அல்லா ஜல்லஷானுஹு திருப்பித் திருப்பி தொழுகையைப்பற்றி கூறியுள்ளான். எதைப்பற்றி அல்லாஹுவே பல நூற்று தடவை கூறியுள்ளானே, அதனுடைய மகத்துவத்தை வேறு யாரால் தெளிவுபடுத்தமுடியும்? இறைவனை அடையவும், மோக்ஷம் பெறவும், ரிஷிகள், பக்தர்கள், பெரும் பெரும் உண்மை சாதுக்கள் உலகை வெறுத்து மலைகளிலும், காடுகளிலும், குகைகளிலும் வெகு காலம் கழித்து பல கஷ்டங்களை சகித்து தவம்செய்து அவற்றைப் பெற முயற்சிக்கின்றார்கள்.

ஆனல் நமக்கு இம்மஹோன்னத நோக்கத்தை அடைய இவ்வாறு செய்யவேண்டியதன்று, "தொழுகை" என இஸ்லாம் கடமையாக்கியுள்ள வணக்கத்தைக்கொண்டு அவற்றை இலகுவில் அடைய முடியும்.

இத்தகைய மேன்மையான வணக்கத்தை நாம் அலட்பம் செய்பவராய் இருக்கின்றோம். தொழுதாலும் கொஞ்சம் கஷ்டம் எடுத்து மிக கவனத்துடன் அஞ்சி, முறைகளை அனுசரித்து தொழுவதில்லை.

தொழுபவர்கள் கீழ் தந்துள்ள சில ஹதீதுகளை (நாயகமவர்கள் வாக்கியம்) படித்து உணர்ந்து, நன்ருக அதன் கருத்துகளை ஆலோசித்து அவ்வாறே செய்ய முயல்வாராயின், நம்முடைய தொழுகை, மற்றவையாவும் மேலானதும், உன்னதமாயும் ஆகிவிடும். இத்தகைய வணக்கம் தான் வேண்டியவை—நாம் உடுத்திருக்கும் உடை உயர்ந்தது, நாம் உபயோகிக்கும் "பாதிங் சோப்" மிகவும் சிறந்தது, நாம் வசிக்கும்வீடானது பலமானதும் கண்கவரக் கூடிய முறையில் அழகானதும் இருக்கிறது. இவ்வாறே இருக்க வேண்டுமென்று எண்ணுகிறோம். அதற்காக வென்று முயற்சிக்கிறோம். அவ்வாறே செய்து முடிக்

கிறோம். அவா ஆசைக்காக இவ்வாறு செய்ய முயலு கிறோம். அப்படியே செய்துவிடுகிறோம். நிர்க்க, இரு லோக நன்மைதரும், அல்லாஹ்வின் பக்கல் நெருங்கி வைக்கும் வணக்கங்களை கவனமாய் செய்வதில் நாம் ஏன் அலக்ஷியம் செய்யவேண்டும்?

உலகில் கஷ்டப்படாமல் எக்காரியமும் செய்து முடிப் பது அசாத்தியமாம். நபிகள் பெருமான் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களும் கஷ்டம் எடுக்காமல் எவ் வேலையும் செய்துமுடிக்கவில்லை. அவர்கள் ஒவ்வொன் றையும் லேசில் விடாமல் அவை முடியுங்கால் முயற்சிப் பவராக இருந்தார்கள். நாம் சுன்னத்தைத் துயர்ந்து நடப்பவர்களாவோம். மேலே கூறியுள்ள (முயற்சிப்பது, "சஈ" செய்வது) சுன்னத்தை அலக்ஷியம் செய்பவராக இருக்கின்றோம். அலக்ஷியத்தைவிட்டு இந்த ஒருசுன்னத்தை மிக பலமாக கைக்கொள்வோமாயின் நம்மில் இவ்வாறு செய்கிற ஒவ்வொரு முஸ்லிமும், முஸ்தபாகமால், காயிதே ஆஜாம் அவர்களைவிட பெரியவர்களாக திகழ முடியும், இதில் யாதொரு சந்தேகமும் இல்லை. இஸ்லாம் இவ் வாறே வழிகாட்டுகிறது. நபிபிரான் (ஸல்) அவர்கள் நாம் உயர்ந்த பதவி அடையவே உபதேசித்தார்கள்.

நபிபிரான் (ஸல்) அவர்களின் அடிச்சுவற்றை இவ் வாறு பின்பற்றவராய உத்தமன் நம்மில் யாரும் உண்டா!

## ஹதீதுகள்.

1. உயர்ந்த வணக்கமானது இரவில் செய்து முடிக்கக்கூடியதாகும்.

2. உயர்ந்த தொழுகைமுன்தின (அதாவது நேர மானதும்) நேரத்தில் செலுத்தும் தொழுகையாகும்.

3. மேலான தொழுகை கியாமை (தொழுகையில் நிர்ப்பது) நீடிப்பதாகும்.

4. நற்கருமங்களில் சிறப்பானது தன் நேரத்தில் தொழுவதும், தாய், தந்தையுடன் நன் நடத்தலுமாகும்.

5. செய்கையில் மிக நன்மையானது நீ, உலகை விடும் சமயம் உன்னுடைய நாவு அல்லாஹுவின் "திக்ரு" (தியானத்தில்) சுவை உள்ளதாய் இருத்தல்வேண்டும்.

இதைப்போன்ற ஹதீதுகளைப் பார்க்குமிடத்து தொழுகையின் பலனுவது அல்லாஹ்வின் பயமும் அவனது நேசமும் நம் மனதில் உண்டாவதாகும். இன்னும் நாச காரியங்களினின்றும் நீங்கி நல் செயல்களில் ஈடுபடவேண்டும் என்பதுமாகும். அந்த உவப்பு என்பது கலிமாவையிப்பாவை மனதில் பதித்துக்கொள்ளவேண்டியதாகும். கலிமா என்பது என்ன? படைத்த நாயகனைத் தவிர்த்து வணக்கத்திற்கும் பணிந்து நடப்பதற்கும் வேறு யாரும் இரான் என்பது பொருள். அது ஒரு உண்மை விஷயம். அதைவிட உண்மைமிக்க விஷயம் உலகத்தில் வேறொன்றுமிருக்க முடியாது. சர்வலோகங்களின் தெய்வம் அல்லாஹ் ஒருவனே; இதை இட்டு வானம் பூமியிலுண்டான ஒவ்வொரு வஸ்துவும் சாட்சி கூறுகின்றது. மனிதன், மிருகம், மரம், கற்காடு, மண்ணின் ஒவ்வொரு அணு, ஓடுகின்ற நதி, வெண்கதிர் வீசும் சூரியன் முதலிய எட்டுத்திக்கெங்கும் சிதறுண்டிருக்கும் சகல வஸ்துக்களில் எதையாவது அல்லாஹ்வின்றி வேறெவரும் படைத்ததுண்டா? அல்லாஹ்வைத்தவிர்த்து வேறெவருடைய கிருபையினுல் அவை உயிர் பெற்று நிலைத்திருக்கின்றனவா? அல்லாஹ்வின்றி வேறுயார் இவற்றை அழிக்க முடியும்? எனவே இவ்வுலகமனைத்தும் அல்லாஹ்வால் சிருஷ்டிக்கப்பட்டும், அவனது தயாள குணத்தினுலேயே நிலைபெற்றும், அல்லாஹ்வே அதன் எஜமானனும் அதிபதியுமாய் இருக்கையில் "இவ்வுலகிலே அந்த அல்லாஹுத்தாஆலா ஒருவனைத் தவிர வேறெவருக்கும் தெய்வீகத்துவம் கிடையாது" என்று நீங்கள் உரைக்கும்பொழுது நீங்கள் முற்றும் உண்மையே உரைத்தீர்கள், இவ்வுரை உண்மை என்பதற்கு நாங்கள் சாட்சி என

வானம் பூமியின் ஒவ்வொரு வஸ்துவும் அறைகூவும். அவன்முன் நீங்கள் சிரம் பணிவீர்களாயின் சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொரு வஸ்துவும் உங்களோடு தலைசாய்க்கும், ஏனெனில் இவையாவும் அவனையே வணங்கி வழிபடுகின்றன. அவனிட்ட கட்டளையை நீங்கள் ஏற்று நடப்பீர்களாயின் வானம் பூமியின் ஒவ்வொரு வஸ்துவும் உங்களுடன் ஒத்துழைத்து உங்களுக்கு உதவும், ஏனெனில் இவையாவும் அதே இறைவனுக்கு அடிபணிந்து கட்டுப்படுகின்றன. அவன் பாதையில் செல்வதில் நீங்கள் துணையற்றுத் தனித்திருக்கமாட்டீர்கள், ஆனால் சிருஷ்டிகளின் எண்ணற்ற அணிவகுப்புகள் உங்களோடுகூடச் செல்லும், ஏனெனில் ஆகாயத்திலுள்ள சூரியன் முதல் பூமியின் சின்னஞ்சிறு அணுவரை ஒவ்வொரு வஸ்துவும் அவனால் வகுக்கப்பட்ட வழியிலேயே எக்காலும் சென்றுகொண்டிருக்கின்றன. அவன்மீது நீங்கள் நம்பிக்கை வைப்பது பொய்யான சக்திமீது நம்பிக்கை வைப்பதன்று வானம் பூமியின் பொக்கிஷத்தின் எஜமானாகிய அம்மாபெரும் சக்தியின்மீது நம்பிக்கை வைப்பவராவீர்கள். சுருங்கக்கூறின், இவ்வுண்மையை நீங்கள் உற்று நோக்கும்போது தூய கோட்பாட்டின்மீது நம்பிக்கைகொண்டு அவ்வாறே தனது வாழ்க்கையை நடத்துவோனுக்கு வானம் பூமியின் சகல சக்திகளும் உதவியளிக்கும் என்பது உங்களுக்கு தெரிய வரும்.

சிருஷ்டிக்கப்பட்டவை அனைத்தும் க்ஷண நேரமும் வீண் அல்லாது சதா ஆண்டவனுக்கு பணிந்து சேவை செய்வதிலேயே இருக்கின்றன. தொழுகையின் ரகசியமும் இதுதான். மனிதனும் சதா தியானத்தில் இருந்த வண்ணம் தன் நாயகன் கட்டளையின்படி பணிந்து நடக்க வேண்டும். தொழுகையினால் இந்த குணம் ஏற்படாவிட்டால் அத்தொழுகை இறைவனிடத்தில் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது!!!

---

# தொழுகையாவது எது?

சகோதரர்களே!

உங்களைக்கொண்டு ஒரு பேரூழியங்கொள்ளவேண்டும் என்பது இறைவனின் திருவுளச் சித்தம். அந்த ஊழியத்திற்காக உங்களுக்குப் பயிற்சியளிக்கும் நோக்கத்துடன் உங்கள்மீது சில வணக்கங்களை அவன் கடமையாக்கியுள்ளான். அவ் வணக்கங்கள் யாவற்றிலும் தொழுகையென்பது மிகப்பெரியதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான வணக்கமாகும். ஆதலால் இன்றைய உபதேசத்தில் அதைப்பற்றி விவரித்துக் கூற விரும்புகின்றேன்.

இறைவனுக்குத் தொண்டு புரிவதற்கே வணக்கம் என்று பெயரிடப்பட்டிருக்கிறது என்பது நீங்கள் அறிந்த விஷயமே. நீங்கள் ஆண்டவனின் அடிமைகளாகப் பிறந்திருக்கும்போது எந்தச் சமயத்திலும், எந்த நிலையிலும் அவனுக்கு அடிமைகளாக இருப்பதிலிருந்து நீங்கள் விடுதலையடைய முடியாது. நான் இத்தனை மணிநேரம் அல்லது இத்தனை விநாடியே ஆண்டவனுக்கு அடிமையாயிருப்பேன் என்றும், மற்ற நேரங்களில் நான் அடிமையாயிருக்கமாட்டேன் என்றும் சொல்ல உங்களுக்கு உரிமை இல்லாததுபோலவே, நான் இவ்வளவு நேரமே இறைவன் வணக்கத்தில் ஈடுபட்டிருப்பேன் என்றும், எஞ்சியுள்ள நேரங்களில் நான் சுயேச்சையாக இருந்துகொண்டு என் இஷ்டப்படி நடப்பேன் என்றும் சொல்ல உங்களுக்கு உரிமை கிடையாது. நீங்கள் அவனுடைய அடிமைகளாகவே ஜனனம் எடுத்திருக்கின்றீர்கள். தன்னுடைய ஊழியத்திற்காகவே அவன் உங்களை படைத்திருக்கின்றான். ஆதலால் உங்கள் ஜீவியகாலம் முழுவதையும் அவனுடைய ஊழியத்திலேயே நீங்கள் செலவிட வேண்டும்; ஒரு விநாடி கூட அவனுடைய ஊழியத்தை நீங்கள் மறந்திருக்க முடியாது.

வணக்கம் என்பதற்கு, நீங்கள் உங்களுடைய இக லோக அலுவல்கள் அனைத்தையும் விட்டு நீங்கி ஒரு ஒதுக்குப்புறத்தில் உட்கார்ந்துகொண்டு, அல்லாஹ் ! அல்லாஹ் ! என்று ஜபித்துக்கொண்டிருப்பது என்பது பொருளல்ல. ஆனால் அதன் உண்மையான பொருளாவது :— இவ்வுலகத்தில் நீங்கள் எந்த வேலையைச் செய்தாலும் இறைவன் வகுத்தச் சட்டப்படி அதனைச் செய்யவேண்டும்; நீங்கள் உறங்குவது, விழிப்பது, உண்ணுவது, குடிப்பது, நடப்பது, உலாவுவது போன்ற செயல்கள் யாவுமே அவனுடைய சட்டத்திற்குக் கட்டுப்பட்டதாயிருக்கவேண்டும்; நீங்கள் உங்கள் வீட்டில் மனைவி, மக்கள், சகோதர சகோதரிகள், இதர உறவினர் ஆகியவர்களுடன் வாழ்ந்து வருவீர்களாயின், இறைவன் எவ்வாறு அவர்களுடன் உறவு பூண்டிருக்கும்படி உத்தரவு அளித்துள்ளானோ அவ்வாறே நீங்கள் அவர்களோடு உறவு கொண்டாடி வரவேண்டும்; நீங்கள் உங்கள் நண்பர்களுடன் கூடிக் குலாவிக்கொண்டிருக்கும்போதும் ஆண்டவனுடைய அடிமைத் தளையிலிருந்து நீங்கள் அகன்றுவிடவில்லையென்பதை உங்கள் ஞாபகத்தில் வைக்கவேண்டும்; நீங்கள் உங்கள் வயிற்றுப் பிழைப்புக்காக சம்பாத்தியஞ் செய்யப் புறப்பட்டு மக்களிடத்தில் கொடுக்கல் வாங்கல் செய்யும்போதுங்கூட நீங்கள் பேச நேரிடுமானால் ஒவ்வொரு வார்த்தையிலும் செய்யும் ஒவ்வொரு செயலிலும் அவைகளுக்கென இறைவனால் வகுக்கப்பட்டுள்ள சட்டங்களை உங்கள் நினைவில் நிறுத்தி, அவன் வகுத்துள்ள எல்லையைக் கடந்துவிடாமல் வார்த்தையாடவும் செயல் புரியவும் வேண்டும்; நீங்கள் காரிருள் சூழ்ந்த இரவு நேரத்தில் ஏதாவதொரு பாபமான காரியத்தை செய்ய நேரிடுமானால் வேறு எவரும் பார்க்க முடியாத நிலையில் இருக்கக்கூடுமாயினும் அந்தத் தனிமையான வேளையிலுங்கூட உங்களை ஆண்டவன் பார்த்துக்கொண்டிருக்கின்றான் என்றும், நீங்கள் இறைவனுக்குப் பயப்பட வேண்டுமேயன்றி உலகத்தவருக்கல்ல என்றும் உங்கள் உள்ளத்தில் நீங்கள் நினைவுகொள்ளவேண்டும். ஒரு

வனாந்தரத்தில் நீங்கள் தனியே போய்க்கொண்டிருக்கும் போது, அங்கு போலீஸ் இருக்கிறது. அல்லது நீங்கள் செய்வதைப் பார்த்திருந்து சாட்சிசொல்ல ஆளிருக்கிறது என்று பயமில்லாது, ஒரு குற்றத்தை நீங்கள் செய்துவிட முடியும் என்றிருந்தாலும், நீங்கள் அவ்விடத்திலும் ஆண்டவனுக்கு அஞ்சி அந்த குற்றத்தை செய்யாதிருக்கவேண்டும்; பொய் பேசி, மோசடி செய்து, கொடுமைபுரிந்து ஒரு மகத்தான இலாபத்தை நீங்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய, உங்களை அதைவிட்டு விலக்க எவருக்கும் சக்தி இல்லாத ஒரு சந்தர்ப்பம் உங்களுக்கு வாய்த்தாலும், அவ்வாறு செய்வதால் ஆண்டவன் உங்கள்மீது கோபமடைவான் என்று அஞ்சி, அந்தப் பெரிய ஆதாயத்தை நீங்கள் கைவிட்டுவிட வேண்டும்; உண்மை பேசுவதிலும், நாணயமாக நடப்பதிலும் உங்களுக்கு நஷ்டமே விளைந்துகொண்டிருக்கிறது என்றாலும், இத்தகைய உண்மை பேச்சாலும் நாணய நடத்தையாலும் ஆண்டவன் உங்கள்மீது சந்தோஷப்படுகிறான் என்பதை கருதி அந்த நஷ்டத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆண்டவனை வணங்குவது என்பதற்குப் பொருள் இதுதான்.

எனவே உலகப் போகங்களைத் துறந்து, ஒதுக்குப் புறங்களிற்போய் உட்கார்ந்துகொண்டு "தஸ்பீஹ்மணி" என்னும் ஜெபமாலையை உருட்டிக்கொண்டிருப்பது மாத்திரம் வணக்கமாகமாட்டாது. இறைவனை தியானித்தல் என்பதற்கு அல்லாஹ்! அல்லாஹ் என்று வாயினால் உருப்போடுவது என்பதுமட்டும் பொருளல்ல. உலக வியவகாரங்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் சந்தர்ப்பங்களிலும் அவனை நினைத்துக்கொண்டேயிருக்கவேண்டும்; அவனுடைய ஞாபகத்தை மறக்கடிக்கும் விஷயங்களில் நீங்கள் பிரவேசித்துக்கொண்டே அவனைமறக்காமல் இருக்கவேண்டும். இலாப நஷ்டத்தின் விருப்பு வெறுப்பினால் ஆண்டவனுடைய சட்டங்களை மீறி நடக்கக்கூடிய எத்தனையோ சந்தர்ப்பங்கள் உங்களுக்கு வாய்க்கலாம்; அத்தருணங்

களிலெல்லாம் ஆண்டவனை மனத்தில் நினைந்து அவனுடைய சட்டத்திற்குட்பட்டே செயல்கள்புரியத் துணியவேண்டும். இதுவே இறைவனுடைய உண்மைத் தியானமாகும். அல்லாஹ்வை ஞாபகத்தில் வைப்பதென்பது இதுவே. இந்த தியானத்தையே சுட்டிக்காட்டி திருகுர்ஆனில் இறைவன் அருளியிருப்பதாவது :—

"தொழுகை நிறைவேற்றப்பட்டுவிட்டால் நீங்கள் பூமியில் பரவி, அல்லாஹ்வுடைய அருட்கொடையான உத்தம ஜீவனோபாயத்தைத் தேடுவதில் ஈடுபடுவீர்களாக! நீங்கள் காரிய சித்தியடைவதற்கு இறைவனை மிகுதியாக தியானஞ் செய்வீர்களாக!"

வணக்கம் என்பதற்கு இப்பொழுது செய்யப்பட்ட விளக்கமான வியாக்கியானத்தை உங்கள் உள்ளத்தில் நன்கு பதியச் செய்துகொண்டு, இத்துணை மகத்தான வணக்கத்தை செய்துமுடிக்க என்னென்ன சாதனங்கள் தேவைப்படுகின்றன? தொழுகையானது மனிதனிடத்தில் அந்த சாதனங்களை எவ்வாறு உற்பத்திசெய்துவிடுகிறது? என்பதை நன்கு கவனிப்பீர்களாக!

நீங்கள் இறைவனுடைய அடிமைக[illegible]ருக்கின்றீர்கள் என்றும் ஒவ்வொரு நேரமும் [illegible] அவனை அடிபணிய வேண்டியவர்களாவீர்கள் என்றும் உங்களுக்கு அடிக்கடி தொழுகை ஞாபகமூட்டுகி[illegible]து. இவ்வாறு உங்களுக்கு ஞாபகமூட்டக் காரணம் என்ன[illegible]வெனில், ஒவ்வொரு மனிதனுடனும் அவனைவிட்டு நீங்காது ஒவ்வொரு சாத்தான் இருந்துகொண்டிருக்கின்றான். அவன் அம்மனிதனை நோக்கி, 'நீ என்னுடைய அடிமையாக இருக்கின்றாய்!' என்று சதா கூறிக்கொண்டே இருக்கின்றான். இவ்வாறு பலக் கோடிக்கணக்கான சாத்தான்கள் உலகம் எங்கணும் பரவி மானிடகோடிகளைப் பார்த்து, 'நீங்கள் எங்கள் அடிமைகளாவீர்கள்!' என்று கூறிக்கொண்டிருக்கின்றனர். எனவே, 'நீங்கள் அல்லாஹ் ஒருவனுக்கே

யல்லாது வேறு எவருக்கும் அடிமைகள் அல்ல!' என்று நாள் ஒன்றுக்கு பன்முறை அவர்களுக்கு ஞாபகமூட்டி லன்றி, சாத்தான்களுடைய அந்தப் பித்தலாட்டத்தைத் தடுக்கமுடியாது. தொழுகையானது இந்த வேலையைச் செய்து முடிக்கிறது. காலையில் எழுந்தவுடனே, யாவற் றிற்கும் முதன்மையாக அந்தத் தொழுகையானது உங் களுக்கு அதைப்பற்றி நினைவூட்டுகிறது. அப்பால் பகல் வேளையில் உங்கள் அலுவல்களில் நீங்கள் கவனமாயிருந்து கொண்டிருக்கும்போது, லுஹர்,அஸர்,மக்ரிப் ஆகியமூன்று வேலைகளிலும் அத்தொழுகையானது உங்களுக்கு அந்த ஞாபகத்தை புதுப்பிக்கிறது. பின்பு நீங்கள் இரவு நேரத் தில் நித்திரை செய்யப்போகும்போது கடைசி முறையாக அதைப்பற்றி அந்தத் தொழுகையானது உங்களுக்கு மீண் டும் நினைவூட்டுகிறது. இதன் காரணமாகவே தொழு கைக்கு திக்று அல்லாஹ்வை நினைத்தல் என்று திருக்குர் ஆன் பெயரிட்டிருக்கிறது.

அப்பால் உங்கள் வாழ்க்கையில் ஒவ்வோர் அடியிலும் இறைவனின் விதிகளை நீங்கள் நிறைவேற்றவேண்டிய திருக்கிறபடியால் கடமையுணர்ச்சியும் அதை நிறைவேற் றச் சித்தமாயிருக்க வேண்டிய பழக்கமும் நீங்கள் பெற வேண்டியது அவசியமாகும். கடமை என்பதன் பொருளை அறியாதவன், விதிகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவே முடி யாது. அன்றியும் இனி ஒருவன் கடமை என்பதன் பொருளையும் கடமையைக் கடமை என்றும் உணர்ந்திருந் தும், அதனை நிறைவேற்றவேண்டும் என்ற உணர்ச்சி அவ னுக்கு உண்டாகாத முறையில் அவன் பழக்கப்பட்டிருக் கின்றான் என்றால், இரவு பகல் இருபத்துநான்கு மணி நேரங்களில் அவனுக்கு விதிக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக் கான கடமைகளை முன்னெச்சரிக்கையோடிருந்து அவன் நிறைவேற்றிவிடுவான் என்று அவனிடத்தில் நம்பிக்கை வைப்பதற்கில்லை.

பட்டாளத்தில் அல்லது போலீஸில் உத்தியோகம் வகிக்க சந்தர்ப்பங் கிடைக்கப்பெற்றவர்கள், அவ்விரண்டு உத்தியோகங்களிலும் தங்கள் கடமைகளை உணர்ந்து அவை நிறைவேற்றுவதற்கு எவ்வாறு பயிற்சியளிக்கப்படுகின்றனர் என்பதை நன்குணர்வார்கள். இரவு காலங்களிலும் பகல் வேளைகளிலும் பலமுறை படைவீரர்கள் யாவரும் ஓரிடத்திற் கூடவேண்டும் என்று குழல் ஊதி அறிவிக்கப்படுகிறது. அப்பால் அவர்கள் கவாத் என்னும் பயிற்சியளிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு கடமைகளை நிறைவேற்றும் பழக்கத்தை யுண்டுபண்ணுவதற்காகவே இவ்வாறு அவர்கள் பயிற்சியளிக்கப்படுகின்றார்கள். அவர்களுக்குள், குழலோசையைச் செவியேற்ற பிறகும் தங்கள் இருப்பிடத்தைவிட்டு வெளியேறாதிருப்பவர்களும், பயிற்சிக்காலத்தில் அளிக்கப்படும் உத்திரவுப்படி உடம்பை வளைத்து நிமிர்த்தாதவர்களும் தகுதியற்றவர்களாயும் சோம்பேறிகளாகவும் கருதப்பட்டு, அவ்வுத்தியோகத்திலிருந்து நீக்கப்பட்டுவிடுகின்றனர். இதுபோலவே தொழுகையிலும் அல்லாஹ்வுடைய வீரர்களாகிய முஸ்லீம்கள் நாலு பாகங்களிலிருந்தும் விரைந்தோடிவந்து, தமது இறைவனின் கட்டளைகளை நிறைவேற்ற முற்றிலும் சித்தமாயிருக்கின்றார்கள் என்பதை மெய்ப்பித்துக்காட்டுவதற்காக, நாளொன்றுக்கு ஐந்துமுறை பாங்கு என்னும் "குழல் ஊதி" அவர்கள் அழைக்கப்படுகின்றார்கள். இந்த அழைப்பைச் செவியேற்ற பின்பும் தன்னுடைய இடத்திலிருந்து அசையாமல் உட்கார்ந்திருக்கும் ஒரு முஸ்லீம் எனப்படுபவன், தான் கடமை என்பதை அறியாதவன் அல்லது அதனை அறிந்திருந்தும் இறைவனின் சேனையில் சேரத் தகுதியற்ற வீணன் என்பதை நிரூபித்துக் காட்டுகின்றான்.

ஆதலினாலேயே "பாங்கு சப்தத்தைக் கேட்டபின்பும் தொழுகைக்காகத் தம்முடைய வீட்டைவிட்டு வெளியேறாதவர்களின் இல்லங்களுக்குத் தீ மூட்டிவிடவேண்டும்" என என் உள்ளம் விரும்புகிறது என்று நபிகள் பிரானவர்கள்

கூறியிருக்கின்றார்கள். மேலும், "தொழுகையே இஸ்லாத்திற்கும் குப்றுக்கும் மத்தியில் மக்களைப் பிரித்துக் காட்டுவதாயிருக்கிறது" என்றும் நாயக வாக்கியம் கூறுகிறது. நபிகள் பெருமானவர்களின் புனித காலத்தில் ஜமாஅத் என்று சொல்லப்படும் கூட்டுத் தொழுகைக்கு ஆஜராகாதவன் முஸ்லிமாகக் கருதப்படுவதில்லை. இதற்காகவே முஸ்லீம்களாக நடித்துவந்த முனபிக்குகள் என்னும் பாசாங்குக்காரர்களும் ஜமாஅத்துத் தொழுகைக்கு கட்டாயமாக ஆஜராகவேண்டிய நிர்ப்பந்த நிலையில் இருந்து வந்தனர். திருக்குர்ஆனில் போலி நடிப்புக்கார முஸ்லீம்களைப்பற்றி கண்டித்துக் கூறும்போது, அவர்கள் தொழுகாதவர்களாயிருந்தனர் என்று கூருமல் "விருப்பமில்லா மனத்தோடு அவர்கள் தொழுகையில் நிற்கின்றனர்" என்று இறைவன் கூறியுள்ளான்.

இதிலிருந்து இஸ்லாம் மதப் பிரகாரம் இறைவனைத் தொழாதவன் முஸ்லீம் என்று அழைக்கப்பட அருகதையற்றவனுயிருக்கின்றான் என்பது நன்கு தெளிவாகிறது. ஏனெனில், இஸ்லாம்மதம் என்பது ஒரு சித்தாந்தம் மட்டும் அன்று; அது அநுஷ்டானமும் சேர்ந்த மதமாகும். ஒரு முஸ்லீம் அவனுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு வினடியிலும் இஸ்லாத்தின் கட்டளைப்படி செயல்புரியவும், அந்த இஸ்லாத்திற்கு எதிரான குப்று என்னும் மத விரோதத்தையும் பாப காரியங்களையும் எதிர்த்துப் போர்புரியவும் வேண்டியவனுயிருக்கின்றான். இப்படிப்பட்ட மகத்தான செயல்முறைத் திட்டத்தைக்கொண்ட மத வாழ்க்கையில் ஈடுபட்டு அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றி முடிப்பதில் எப்பொழுதும் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவேண்டியது முஸ்லீம்களின் கடமையாகும். இத்தகைய முன்னெச்சரிக்கையோடு நடக்காத ஒவ்வொரு முஸ்லிம் எனப்படுபவனும் இஸ்லாம் மதத்திற்குத் தேவையில்லாதவனுகவே இருக்கின்றான். இதற்காகவே சத்திய சன்மார்க்கமாகிய தீனுல் இஸ்லாத்தில் நாளொன்றிற்கு ஐங்காலத் தொழுகைகள் கடமையாக்கப்பட்டு, தங்களை முஸ்லிம்கள் என்று

கூறிக்கொள்பவர்கள் உண்மையிலேயே முஸ்லிம்களாக இருக்கின்றார்களா இல்லையா? என்றும், செயல் உலகில் இறங்கும்போது ஆண்டவனின் கட்டளைகளை நிறைவேற்றி வைக்க ஆயத்தமாயிருக்கிறார்களா இல்லையா? என்றும் பரிசோதிக்கப்படுகிறார்கள். அவர்கள் இறைவனுடைய இராணுவப் பயிற்சியாம் தொழுகையின் அழைப்பொலி யாகிய பாங்கு சப்தத்தை செவியேற்ற பிறகு தொழுகைக் காக நகராதிருப்பவர்களானால், அவர்கள் பரிசுத்த இஸ்லாத்தின் செயல்முறைத் திட்டத்தை நிறைவேற்றச் சித்த மாயில்லை என்பது தெளிவாகிவிடுகிறது. இந்த நிலையில் அவர்கள் அல்லாஹ்வின்மீது அவனுடைய திருத்தூதர்மீதும் நன்னம்பிக்கை கொண்டிருக்கின்றார்கள் என்று கூறுவ தற்கு அர்த்தமே இல்லாமற்போய்விடுகிறது. இதனாலேயே "அல்லாஹ்வுக்கு அஞ்சி நடக்க விரும்பாதவர்களுக்கு மட்டுமே தொழுகை பெரும் பாரமாகத் தோற்றுகிறது" என்று குர்ஆனில் இறைவன் திருவுளம்பற்றியிருக்கிறான். எனவே தொழுகையைத் தாங்கமுடியாப் பெருஞ்சுமை யாகக் கருதுபவர்கள் அல்லாஹ்வுக்குத் தொண்டுசெய்ய வும் அவனுக்கு கீழ்படிந்து நடக்கவும் தாங்கள் சித்தமா யில்லை என்பதை மெய்ப்பித்து காட்டுபவர்களாயிருக்கின் றனர்.

இனி மக்கள் தொழுகையாற் பெறக்கூடிய மூன்றாம் பலனாவது ஆண்டவனின் அச்சமாம். இது எல்லா மனி தர்களுடைய உள்ளத்திலும் எப்பொழுதும் அகலாது இருக்கவேண்டிய ஒரு குணமாகும். இறைவன் எந்த வேளையிலும் எந்த இடத்திலும் தன்னைப் பார்த்துக்கொண் டிருக்கின்றான், தன்னுடைய செயல் ஒவ்வொன்றையும் அவன் அறிகின்றான்; இருட்டிலும் அவன் தன்னைப் பார்க் கின்றான்; ஏகாந்தத்திலும் அவன் தன்னுடனே இருந்து கொண்டிருக்கின்றான்; உலக மக்கள் யாவரையும் விட்டுத் தான் ஒளிந்துக்கொள்ளலாம்; ஆனால் அல்லாஹ்வை விட் டுத்தான் மறைந்திருக்க முடியாது; உலகத்தில் யாவ

ருடைய தண்டனையிலிருந்தும் தான் தப்பித்துக்கொள்ளலாம்; ஆனால் அல்லாஹ்வுடைய தண்டனையிலிருந்து தான் தப்ப முடியாது' என்ற திட நம்பிக்கை உண்டாகாத வரை ஒரு முஸ்லீம் இஸ்லாத்தின் சட்டப்படி செயல்புரிய முடியாது. இந்த நம்பிக்கையானது இறைவனுடைய உத்திரவை மீறுதபடி மனிதனைத் தடுத்தாட்கொள்ளுகின்றது. இந்தத் திட நம்பிக்கையின் வலிமையினாலேயே மனிதனுடைய வாழ்க்கைத் துறையில் இறைவன் வகுத்துள்ள ஹரும், ஹலால் என்னும் விதி, விலக்குக்களின் எல்லைக்குள் அவன் அடங்கி நடக்கின்றான். ஒரு முஸ்லிமுடைய இந்த நம்பிக்கை பலஹீனப்படுமாயின், சரியான அர்த்தப்படி அவன் முஸ்லிம்களைப்போன்று வாழ்க்கை நடத்த முடியாது. இந்த நம்பிக்கையை மனிதனுடைய உள்ளத்தில் அடிக்கடி புதுப்பித்துக்கொண்டிருப்பதற்காகவே நாள் ஒன்றுக்கு ஐந்து வேளைத் தொழுகைகளை இறைவன், மானிடர்மீது கடமையாக்கியுள்ளான். திருகுர்ஆனிலும் தொழுகையிலுள்ள இந்த தத்துவத்தை விளக்கி கூறியுள்ளான்.

"நிச்சயமாக தொழுகையானது வெறுக்கத்தக்கதும் மானக்கேடானதுமான செயல்களைவிட்டு மானிடனைத் தடுத்தாட்கொள்ளுகின்றது" என்று இறைவன் கூறியிருப்பதன் காரணத்தை நீங்களாகவே ஆழ்ந்து சிந்தித்து உணர்ந்துகொள்ளலாம். உதாரணமாக, தொழுகைக்காக நீங்கள் உடற் சுத்தம், உடைசுத்தத்துடன் உலூவென்னும் அர்த்த ஸ்நானஞ்செய்துகொண்டு பள்ளிவாயிலுக்கு வருகின்றீர்கள். நீங்கள் உடல் அசுத்தமாயிருக்கும்போது குளிக்காமல் அல்லது உடை அசுத்தமாயிருக்கும்போது அதை மாற்றாமல், அல்லது உங்களுக்கு உலூ இல்லாமலிருக்கும்போது உலூ செய்துக்கொண்டதாகக் கூறிப் பள்ளிவாசலுக்குத் தொழுக வந்துவிடுவீர்களானால் அதைக் கண்டுபிடித்து உங்கள்மீது குற்றஞ் சாட்டிவிட இந்த உலகத்தில் எவரால் முடியும்? என்றாலும் நீங்கள் அவ்வாறு செய்வதில்லை. காரணம் என்ன? உங்களுடைய குற்றத்தை

அல்லாஹ்விடம் மறைத்துக்கொள்ள உங்களால் முடியாது என்று நீங்கள் நிச்சயமாக நம்பியிருப்பதே. இதுபோலவே தொழுகையில் இரகசியமாக ஓத வேண்டியவைகளை நீங்கள் ஓதாவிட்டால் அதை எவராலும் கண்டுபிடித்துவிட முடியாது. எனினும் நீங்கள் ஒருகாலும் அப்படிச் செய்யமாட்டீர்கள்; ஏனெனில் நீங்கள் ஓதுவதை அல்லாஹ் கேட்டுக்கொண்டிருக்கிறான் என்றும், அவன் உங்களுடைய ஜீவ நாடியைக்காட்டிலும் உங்களிடம் மிக நெருங்கியிருக்கின்றான் என்றும் நீங்கள் நிச்சயமாக நம்பிக்கை கொண்டிருக்கின்றீர்கள். இவ்வாறே மனித சஞ்சாரமற்ற ஒரு வனத்தில், அல்லது இருள் சூழ்ந்த இரவு காலத்தில், அல்லது உங்கள்வீட்டில் தனிமையாக நீங்கள் தொழுகின்றீர்கள்; அந்த இடங்களிலெல்லாம் உங்களைக் கவனிப்பவர் எவரும் இருக்கமாட்டார்கள்; நீங்கள் தொழுதுவிட்டீர்கள் அல்லது தொழுகவில்லை என்பதை யாவரும் அறியார். இவ்வாறிருக்க அந்த இடங்களிலெல்லாம் நீங்கள் ஆண்டவனைத் தொழுகக் காரணமென்ன? நீங்கள் மக்கள் கண்களைவிட்டு மறைந்திருந்தாலும் இறைவனுடைய கட்டளைக்கு விரோதமாய் நடக்க அஞ்சுவதும் எவருடைய குற்றத்தையும் இறைவன் முன்னே மறைக்க முடியாது என்று நீங்கள் நம்பியிருப்பதுமேயாகும். இதன் மூலமாகத் தொழுகையானது அல்லாஹ்வுக்கு அஞ்சி நடத்தலையும் அவன் எங்கும் இருப்பவனாகவும் எல்லாம் அறிபவனாகவும், இருக்கின்றான் என நம்பிக்கையும் மக்களுக்கு எவ்வாறு அளிக்கின்றது என்பதை நீங்கள் அறிந்துக் கொள்ளலாம். இந்த அச்சமும் நம்பிக்கையும் உங்கள் உள்ளங்களிலே அடிக்கடி தோன்றாமலிருக்கும்வரை இரவு பகல் இருபத்துநான்கு மணி நேரமும் நீங்கள் ஆண்டவனுடைய வணக்கத்திலும் ஊழியத்திலும் எவ்வாறு ஈடுபட்டிருக்கமுடியும்? இந்த அச்சமும் நம்பிக்கையும் உங்கள் இருதயங்களில் இல்லாமற்போனால், அல்லும் பகலும் நீங்கள் ஈடுபடும் ஆயிரக்கணக்கான அலுவல்களில் எவ்வாறு ஆண்டவனை அஞ்சித் தீமைகளைவிட்டு விலகி நன்மைகளைச்

செய்வதில் நிலைத்து நிற்கப் போகின்றீர்கள்? ஆண்டவனுக்கு அடிபணிந்து நடப்பதில் உங்களுக்கு நான்காவதாக தேவைப்படுவது அவனுடைய சட்டதிட்டங்களை நீங்கள் அறிந்திருப்பதாம்.

அந்தச் சட்டங்கள் உங்களுக்குத் தெரியாமல் இருக்கும் பட்சத்தில் நீங்கள் எவ்வாறு அவைகளுக்கு உட்பட்டு நடக்க முடியும்? தொழுகையானது இந்த அறிவையும் உங்களுக்கு அளிக்கிறது. நீங்கள் நாள்தோறும் இறைவனுடைய கட்டளைகளை உணர்ந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவே, தொழுகையில் திருகுர்ஆன் பாராயணஞ் செய்யப்படுகிறது. இஸ்லாம் மதப் போதனைகளை நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும்என்ற நன்னோக்கத்துடனேயே, ஜும்ஆ என்னும் வெள்ளிக்கிழமைத் தொழுகையில் குத்பாவாகிய மேடைப் பிரசங்கமும் நிகழ்த்தப்படுகிறது. வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகையிலும் பிரதிதினமும் கூடி நின்று நிறைவேற்றப்படும் ஜமாஅத்தென்னும் தொழுகையிலும் வேறொரு நன்மையும் உண்டு. அது யாதெனில் கற்றவர்களையும் கல்லாதவர்களையும் ஓரிடத்திற் கூட்டுவித்து, அவர்களில் கற்றவர்கள்மூலமாகக் கல்லாத மக்களுக்கு இறைவனின் கட்டளைகளைப் போதிப்பதாகும். இக்காலத்தில் தொழுகையில் உங்களால் ஓதப்படுவதன் பொருளையுணர்ந்துகொள்ள நீங்கள் முயற்சிஎடுத்துக்கொள்ளாமலிருப்பது துர்ப்பாக்கியமாகும். நீங்கள் இஸ்லாம் மத ஞானத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத முறையில் வெள்ளிக்கிழமை தொழுகையில் குத்பா என்னும் மேடைப் பிரசங்கம் நிகழ்த்தப்படுகிறது. ஜமாஅத் என்னும் கூட்டுத் தொழுகைக்கு நீங்கள் ஆஜராகி இருக்கும்பொழுது உங்களில் மதக் கல்வியுடையவர்கள் அக்கல்வி பயிலாத தம் சகோதரர்களுக்கு ஒன்றும் போதிப்பதில்லை; கற்றவர்களிடம் கல்லாதவர்கள் கேட்டுத் தெரிந்துகொள்ள முயல்வதுமில்லை. தொழுகையானது இவ்வாறு நீங்கள் பயனடையப் பல சந்தர்ப்பங்களை உங்களுக்கு அளிக்கிறது.

அந்தச் சந்தர்ப்பங்களை நீங்கள் பயன்படுத்திக்கொள்ளாவிட்டால் அக்குறை தொழுகையைச் சார்ந்ததாகாது.

இனித் தொழுகையினால் கிடைக்கும் ஐந்தாவது பலனாவது, ஒவ்வொரு முஸ்லிமும் வாழ்க்கைப் புயலைத் தனித்து நின்று எதிர்க்காமல், முஸ்லிம்கள் யாவரும் ஓர் உறுதியான சமுதாயமாகத் திரண்டு, ஆண்டவனுடைய வணக்கத்தில் அதாவது அவனுடைய உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதிலும், அவனுடைய சட்டதிட்டங்களைச் செயலுக்குக்கொண்டுவருவதிலும், அவைகளை உலக மக்களிடையே அமுல்நடத்தி வருவதிலும் அவர்கள் ஒருவர்க்கொருவர் பரஸ்பர உதவியாளர்களாக விளங்குவதாகும். ஒருபுறத்தில் இறைவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பவர்கள் என்னும் முஸ்லிம்களும், மற்றொருபுறத்தில் அவனுடைய எதிரிகள் என்னும் காபிர்களும் இவ்வுலக வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள். கீழ்ப்படிதலுக்கும் விரோதத்திற்கும் இடையே அல்லும் பகலும் போராட்டம் நிகழ்ந்துகொண்டேயிருக்கிறது. எதிரிகள் இறைவனின் சட்டத்தை மீறுகின்றனர்; அவனுக்கு விரோதமாகச் சாத்தானின் சட்டத்தை அவர்கள் உலகத்தில் அமுல்நடத்துகின்றனர். ஒவ்வொரு முஸ்லிமும் தனித்தனியாக அவர்களை எதிர்த்தால் வெற்றி பெறமுடியாது. ஆண்டவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் நல்லடியார்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து, அந்தச் சாத்தானின் சட்டம் என்னும் தெய்வத் துரோகத்தை எதிர்த்துப் போராடி, இறைவனுடைய சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டியது அவசியமாயிருக்கிறது. தொழுகை ஒன்றே மற்றவைகளைக்காட்டிலும் அதிகமாக ஐக்கிய சக்தியை மக்களுக்கு அளிக்கவல்லதாயிருக்கிறது. தொழுகைக்காக ஐந்து வேளையிலும் பள்ளிவாயிலிற் கூடுவதும், ஜும்ஆ, இரு ஈதுப் பெருநாள் ஆகியவற்றிற் கூடும் பெருங் கூட்டங்களும், முஸ்லிம்களை ஓர் உறுதியான கோட்டைச் சுவரைப்போல் ஆக்கிவிடுவதுடன், அவர்களின் தினசரி வாழ்க்கை முறையில் ஒருவர்க்கொருவர்

உதவியளிக்க அவசியமான—ஒருமுகமாக ஐக்கியத்துடன் செயலாற்றுவதான—திறமையும் அவர்களுக்கு அளிக்கிறது.

---

ஹஜரத் அபூஹுறைரு என்பவர் அறிவிக்கிருர் :—

இன்று உங்களுக்குள் நோன்பு இருப்பவர் யார்? என்று ரசூலேஅக்ரம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கேட்டார்கள்; ஹஜ்ரத் அபூபக்கர் 'நான்' என்ருர். உங்களுக்குள் இன்று ஒரு ஜனாஜா பின் சென்றவர் யார்? என்று கேட்டார்கள்: அபூபக்ர்சித்தீக் 'நான்' என்ருர். ஒரு ஏழைக்கு இன்று உணவூட்டினவன் யார்?' என்று கேட்க; ஹஜரத் அபூபக்ர் 'நான்' என்ருர். இன்று உங்களுக்குள் ஒரு நோயாளியை விசாரித்தவர் யார்? என்று நபிநாயகமவர்கள் கேட்க; ஹஜ்ரத் அபூபக்கர் 'நான்' என்று பதிலளைத்தார், அப்பொழுது இவை தன்னிடம் ஒன்று சேர்ந்திருக்கும் ஒரு மனிதன் நிச்சயமாக சுவர்க்கம் புகுவான்' என்று நபிகள் நாயகம்ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் அருளிச் செய்தார்கள்.

---

உலகில் இன்று காணப்படும் எல்லாத் தொல்லைகளுக்கும், கெடுதல்களுக்கும் மூலக் காரணம் தன்னுடைய பெரிய சிறிய சகல காரியங்களினின்றும் இறைவனை விலக்கிவைப்பதே ஆகும். பூஜைக்குமட்டும் இறைவன் தேவை; அரசியல், ஒழுக்கம், வியாபாரம் மற்ற எல்லா விஷயங்களிலும் அவன் வேண்டியவன் அல்லன். அவனுடைய சட்டதிட்டம் கோயிலிலும், சர்ச்சிலும் மசூதியிலும் மட்டும் வேண்டியவை பார்லிமெண்டிலும், அசம்பளியிலும், நீதி மன்றத்திலும், கூட்டுறவு இதர இடங்களிலும், காரியங்களிலும் அவனது சட்டதிட்டங்கள் வேண்டாதவை, பலனற்றவை—அவனது அதிகாரம், வல்லமை அவனிடத்திலேயே இருக்கட்டும்.

நமக்கு நாமே எஜமானன் தம் அறிவுகொண்டே நடந்து கொள்வோம். வழிகாட்ட இறை தூதோ, தெய்வ வேதமும், இன்னும் வழிபாடோ வேண்டியதில்லை என இன்று முழு உலக மக்களும் இவ்வாறு கருதி கண்மூடி பரந்துகொண்டிருக்கிறார்கள். இது சரி இல்லை என்றும், இறைவன் எக்காலும் வேண்டியவன். அவனது சட்ட திட்டங்கள் எவ்விடத்திலும் பெரிய, சிறிய எச்செயல் எவ்விஷயத்திலும் வேண்டியவையாகும் என்றும், இவ்வாறு இறைவனை ஏற்று தெய்வ சட்டங்களுக்குப் பணிந்து அவனது தூதுக்குப் பின் துயர்ந்து உலகம் நடப்பதுதான் சரி. இவற்றை நிராகரித்து நடப்பது உலகை நாசமாக்கும் வேலைகளாவன என்பது உண்மையாகும். இவ்வுண்மையை நன்கு விவரித்துக்காட்டும் சில நூல்களை தங்கள் முன் அறிமுகப்படுத்துகின்றோம்.

5714 2

| | | | | |
|---|---|---|---|---|
| 1. இஸ்லாம் மத விளக்கம் By மௌதூதி | 2 | 8 | 0 |
| 2. சாந்திக்கு வழி ,, ,, | 0 | 6 | [illegible] |
| 3. பகுத்தறிவுக்கேற்ற மதம் எது? By மீரட் மௌலானா | 0 | 3 | 0 |
| 4. சத்தியமேவ ஜெயதே ,, C. S. P. | 0 | 12 | 0 |
| 5. இஸ்லாமிய ஆட்சியில் முஸ்லீம் அல்லாதார் ,, ,, | [illegible] | [illegible] | 0 |
| 6. மறுமையின் உறுதி ,, நாகூரி | 0 | 2 | 0 |
| 7. உலக வழிகாட்டியின் வரலாறு By நாகூரி | 0 | 3 | 0 |
| 8. முஸ்லீம் சமூக சீர்திருத்தம் .... .... | 1 | 0 | 0 |
| 9. (இமாம்) கஸ்ஸாலி ... ... | 1 | 0 | 0 |
| 10. மனிதனுக்கு—? .... .... | 0 | 8 | 0 |
| 11. பர்தா (கோஷா) ... ... | | | |
| 12. தீனும் ஷரியத்தும் ... ... | | | |
| 13. உத்தமப் பெரியார்கள் சத்திய வாழ்க்கை (HIKAYATH—E—SAHABA) | 3 | 0 | 0 |